# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை - 2022 சனவரி

## (301) நிதி அறிக்கையிடல்

பரீட்சார்த்திகளால் பெருமளவில் விடப்பட்டிருந்த பொதுவான தவறுகள் அடையாளங் காணப்பட்டன. தவறு விட்டிருந்த பரீட்சார்த்திகள் அவர்கள் விட்ட தவறுகளை அடையாளங் காண்பதுடன் எதிர்காலப் பரீட்சைகளில் வெற்றிபெறும் பொருட்டு சகல கோட்பாடுகளையும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

### பகுதி A

### வினா இல. 01

**(a)** நிதித் தகவல்களின் பயனை மேம்படுத்துகின்ற இரண்டு தர ரீதியான பண்புகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரண்டு தர ரீதியான பண்புகளைக் குறிப்பிட்டிருந்தனராயினும் ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே தர ரீதியான பண்புகளை விபரித்திருந்தனர்.

**இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை சிறப்பாக இருந்தது.**

**(b)** நிதிக் கூற்றுகளின் மூலகங்களை அளவீடு செய்யப் பயன்படுத்தப்படும் இரண்டு வெவ்வேறு அளவீட்டு அடிப்படைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இரண்டு வெவ்வேறு அளவீட்டு அடிப்படைகளைச் சரியாகப் பெயரிடத் தவறியிருந்தனர். பலர் கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு நியமங்கள் போன்றவற்றைப் பெயரிட்டிருந்தனர்.

**இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

### வினா இல. 02

**(a)** நிலைபேறான அறிக்கையிடல் எனும் பதத்தை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. மிகச் சிலரே இப்பகுதிக்குச் சரியாக விடையளித்திருந்தனர்.

**இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**(b)** ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் வணிக மாதிரியில் உள்ளடக்கப்பட்டுள்ள இரண்டு பிரதான பகுதிகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

**இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை மோசமானதாக இருந்தது.**

## வினா இல. 03

**(a)** நிறுவனமொன்றிற்கு நிதி விகிதங்களின் பகுப்பாய்வு ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகமான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய விடைகளைச் சமர்ப்பித்து முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

**(b)** விகிதப் பகுப்பாய்வின் இரண்டு வரையறைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் சரியான விடைகளை எழுதி இப்பகுதிக்கான முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை சிறப்பாக இருந்தது.**

## வினா இல. 04

LKAS 38 அருவச் சொத்துக்கள் நியமத்தின்படி, ஒவ்வொரு கிரயமும் அருவச் சொத்தொன்றாக ஏற்பிசைவு செய்யப்பட முடியுமா என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது.

அதிகளவான பரீட்சார்த்திகள் அருவச் சொத்தாக ஏற்பிசைவு செய்வதன் தேர்வு நிபந்தனையை எழுதியிருந்தனர்.

அவர்கள் ஒவ்வொரு கிரய உருப்படியும் அருவச் சொத்தொன்றாக அல்லது ஒரு செலவினமாக எற்பிசைவு செய்யப்படுவதை காரணங்களுடன் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

# <u>பகுதி B</u>

## வினா இல. 05

நேரில் முறையைப் பயன்படுத்தி 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்வுக் கூற்றைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

அதிகமான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சிறப்பாக விடையளித்திருந்ததுடன் உயர்ந்தளவு புள்ளிகளையும் பெற்றிருந்தனர். இருப்பினும், மிகச் சில பரீட்சார்த்திகள் கீழ்வரும் தவறுகளை விட்டிருந்தனர் ;

(1) வரிக்கு முன்னரான நிகர இலாபம் பிழையாக எடுக்கப்பட்டிருந்தது.

(2) நிலையான சொத்துக்களின் தேய்மானத் தொகை சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(3) செயற்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதி நடவடிக்கைகளின் தவறான வகைப்படுத்தல்.

(4) காசு உட்பாய்வுகள் எதிர்மறைப் பெறுமானங்களாகவும் காசு வெளிப்பாய்வுகள் நேர்மறைப் பெறுமானங்களாகவும் காட்டப்பட்டிருந்தன.

(5) சில பெறுமானங்கள் ரூபா ஆயிரங்களில் காட்டப்பட்ட அதேவேளை ஏனைய பெறுமானங்கள் அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 06

**(A)** தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மார்ச் 31 இலான பிற்போடப்பட்ட வரிச் சொத்து அல்லது பரிப்பினைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்து முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பெரும்பாலானவர்களுக்கு வரி அடிப்படையைச் சரியாகக் கணிப்பிட முடியவில்லை. இதனால், தேவையான பிற்போடப்பட்ட வரிச் சொத்தைப் பெற முடியவில்லை.

**விடப்பட்ட பொதுவான தவறு:** தவறான வரி வீதங்கள், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பிற்போடப்பட்ட வரிப் பரிப்புக்களைத் தவறாக இனங்கண்டிருந்தமை.

**(B)** 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பிற்போடப்பட்ட வரிச் செலவினங்களைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்பட வேண்டிய பிற்போடப்பட்ட வரித் தெகையை இனங்கண்டு, கணிப்பிடுவதற்குத் தவறியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமானதாக இருந்தது.**

## வினா இல. 07

**(a)** தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2021 மார்ச் 31 இலான கட்டடத்தின் திரண்ட தேய்மானத்தையும் முன்கொணரற் பெறுமதியையும் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் தேய்மானத்தைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். பெரும்பாலானவர்கள் பயன்தரும் ஆயுட்காலத்தை 32 ஆண்டுகளாகக் கருதி (மீதமுள்ள ஆயுட்காலம் 28 ஆண்டுகள் என்பதைக் கவனத்தில் கொள்ளாது) தேய்மானத்தைக் கணிப்பிட்டிருந்தனர்.

**(b)** குத்தகைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் **வரையறுக்கப்பட்ட சிக்மா கம்பனியின்** 2021 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று, 2021 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று ஆகியவற்றின் பிரித்தெடுப்புகளைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

ஒரு சில பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். அதிகமானவர்கள் கீழ்வரும் தவறுகளை விட்டிருந்தனர் :

(1) குத்தகைப் பெறுமதியைக் கணிப்பிடும்போது முற்பணக் கொடுப்பனவு ரூபா 1 மில்லியனைச் சேர்த்திருந்தனர்.

(2) குத்தகைப் பொறுப்பின் நடைமுறைப் பகுதி மற்றும் நீண்டகாலக் கடன் என்பன வேறாக்கப்பட வில்லை.

(3) தேய்மானத் தொகை மற்றும் வட்டிச் செலவினத் தொகை என்பன தவறாகக் கணிப்பிடப் பட்டிருந்தன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி C

### வினா இல. 08

கம்பனியொன்றின் முற்றடக்க வருமானக் கூற்று, நிதி நிலைக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் தேய்மான அட்டவணை ஆகியவற்றைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலானவர்கள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் சிலர் இவ்வினாவுக்கு உயர்ந்தளவு புள்ளிகளை அடைந்திருந்தனர்.

**இனங்காணப்பட்ட பொதுவான தவறுகள் :**

(1) இழப்பீட்டுச் செலவினங்கள் ரூபா 750,000/- இற்குப் பதிலாக ரூபா 1,000,000/- வழங்கப் பட்டிருந்தது.

(2) கடன்படுகைக் கிரயமானது 11 மாதங்களுக்குக் கணிப்பிடுவதற்குப் பதிலாக முழுமையான ஆற்டிற்குக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(3) வாடகைச் செலவினங்கள் மற்றும் முற்கொடுப்பனவுத் தொகை என்பன தவறாகக் காட்டப்பட்டிருந்தன.

(4) வட்டியை நிதிக் கிரயத்திற்கு செலவுப் பதிவு செய்து, மூலதனப் புத்துருவாகும் வேலைக்கு வரவுப் பதிவு செய்வதற்குப் பதிலாக நிதிக் கிரயத்திற்கு செலவுப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) குறைந்து செல்லும் மீதி முறையில் தேய்மானம் கணிப்பிடப்பட்டிருந்தது.

(6) வலுக்குறைப்பு இழப்பினைக் கணிக்கும்போது முன்கொணரற் பெறுமதி ரூபா 4.5 மில்லியனைப் பெறத் தவறியிருந்தனர்.

(7) வலுக்குறைப்பு இழப்புக்கு தீர்வு காணப்படவில்லை.

(8) கடனின் நடைமுறை மற்றும் நடைமுறையல்லா பகுதி முற்றாக விடுபட்டிருந்தது.

(9) மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ஏனைய முற்றடக்க வருமானத்தில் காட்டப்பட்டிருந்தது.

(10) வாடகைச் செலவினங்கள் ரூபா 300,000/- இற்குப் பதிலாக ரூபா 900,000/- எனக் காட்டப் பட்டிருந்தது.

(11) வங்கிக் கடனின் நடைமுறைப் பகுதியை நடைமுறையல்லாப் பகுதியிலும் நடைமுறையல்லாப் பகுதியை நடைமுறைப்பகுதியாகவும் குழப்பி எழுதியிருந்தனர்.

(12) காணி 5% இல் தேய்மானம் செய்யப்பட்டிருந்தது.

**இந்த வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 09

**(a)** தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மொத்த இலாப விகிதம், விரைவுச் சொத்து விகிதம், தொக்கு இருப்புக் காலம், கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம், பங்கொன்றின் வருவாய் ஆகியவற்றைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

அதிகமான பரீட்சார்த்திகள் மேற்படி விகிதங்களை சரியாகக் கணிப்பிட்டு, இந்தக் கணிப்பீட்டுப் பகுதிக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்டனர்.

விகிதங்களைக் கணிப்பிடும்போது சிலரால் கீழ்வரும் தவறுகள் விடப்பட்டிருந்தன :

(1) விரைவுச் சொத்து விகிதத்தைக் கணிப்பிடும்போது தொக்கு அகற்றப்பட்டிருக்கவில்லை.

(2) இலாபத்தை விற்பனையால் வகுத்தும், மொத்த இலாபத்தை விற்பனைக் கிரயத்தினால் வகுத்தும் மொத்த இலாப விகிதம் கணிப்பிடப்பட்டிருந்தது.

(3) பங்கொன்றின் வருவாயை (EPS) கணிப்பிடும்போது பங்குகளின் எண்ணிக்கைக்குப் பதிலாக பங்கு மூலதனத்தினால் இலாபம் வகுக்கப்பட்டிருந்தது.

**இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை சிறப்பாக இருந்தது.**

**(b)** செயலாற்றுகையைப் பகுப்பாய்வு செய்யுமாறு கேட்கப்பட்டது.

கீழ்வரும் பொதுவான தவறுகள், சில பரீட்சார்த்திகளால் விடப்பட்டிருந்தன :

(1) பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான காரணத்தை எடுத்துக்காட்டாது விகிதமானது அதிகரிக்கிறது அல்லது குறைவடைகிறது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

(2) தொழில்துறை விகிதங்களுடன் ஒப்பீடு செய்வதற்குப் பதிலாக முன்னைய ஆண்டுடன் விகிதங்கள் ஒப்பீடு செய்யப்பட்டிருந்தன.

**இந்தப் பகுதிக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 10**

**(a)** ஒன்றித்தலால் ஏற்படும் நன்மதிப்பைக் கணிக்குமாறு கேட்கப்பட்டது.

பெருமளவானவர்கள் நன்மதிப்பைச் சரியாகக் கணித்து முழுமையான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர்.

**(b)** 2021 மார்ச் 31 இலான ஒன்றித்த நிதி நிலைக் கூற்றைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது.

அதிகமானவர்கள் இந்தப் பகுதிக்கு 5 இற்கும் மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். கீழ்வரும் பொதுவான தவறுகள் இனங்காணப்பட்டன :

(1) மேலதிகமாக அறவிடப்பட்ட தேய்மானம் ரூபா 600,000/- இனை சேர்த்து PPE மீதி சீராக்கம் செய்யப்படவில்லை.

(2) 80 % மான மேலதிக தேய்மானத் தொகையானது ஒன்றித்த கைக்கொள் இலாபக் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் 20 % மேலதிக தேய்மானத் தொகையானது கட்டுப்பாடற்றோர் நாட்டக் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்படவில்லை.

(3) தொக்கு மீதியானது தேறாத இலாபத்தைக் கழிப்பதன் மூலம் சீராக்கம் செய்யப்படவில்லை.

(4) 80 % மான தேறாத இலாபம் ஒன்றித்த கைக்கொள் இலாபத்திற்கு வரவுப்பதிவு செய்யப்பட வில்லை என்பதுடன் 20 % மான தேறாத இலாபம் கட்டுப்பாடற்றோர் நாட்டக் கணக்கிற்கு வரவுப் பதிவு செய்யப்படவில்லை.

(5) கம்பனிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்களான ரூபா 12 மில்லியன் வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகள் கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

(6) விற்பனை மீதான இலாபம் ரூபா 3 மில்லியன், ஒன்றித்த கைக்கொள் இலாபக் கணக்கிற்கு செலவுப்பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**பரீட்சார்த்திகளின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான பொதுவான விடயங்கள் :**

(1) முழுமையான பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் முழுவதையும் நன்றாகப் படித்து ஒவ்வொரு அலகு அல்லது பரப்புகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்தை முழுமையாக விளங்கிக் கொள்வதை விருத்திசெய்து கொள்ளவும்.

(2) பரீட்சார்த்திகள் வினாவைக் கவனமாக வாசித்து கேட்கப்பட்ட வினாவுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.

(3) கணிப்பீடுகளுடன் தொடர்புபட்ட சகல செய்கை வழிகளையும் காட்டவும்.

(4) ஏதாவது எடுகோள்கள் எடுக்கப்படுமாயின் அத்தகைய எடுகோள்களை குறிப்பிடவும்.

(5) ஒவ்வொரு வினாவுக்குமான விடையையும் ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிப்பதுடன் வினா இலக்கங்களையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

(6) கையெழுத்து தெளிவாக இருப்பதில் கவனம் செலுத்தவும்.

(7) கடந்தகால வினாப்பத்திரங்களைப் பல தடவைகள் செய்து பார்ப்பது அறிவு, திறன்கள் மற்றும் வேகத்தைப் பெறுவதற்கு உதவி புரியும். இது எதிர்காலப் பரீட்சைகளில் அதே வகையான வினாக்கள் கேட்கப்படும்போது அனுகூலமானதாக அமையும்.

(8) இப்பாடத்துடன் சம்பந்தப்பட்ட கணக்கீட்டு நியமங்கள், பரிந்துரைக்கப்பட்ட விடைகள், முன்னோடி வினாத்தாள்கள் கட்டுரைகளைப் படிப்பது அறிவை மேம்படுத்தும்.

(9) நேர முகாமைத்துவம் என்பது பரீட்சையின்போது முக்கியமானதொன்றாகும். விடையளிக்கும் போது ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளின் அடிப்படையில் பரீட்சார்த்திகள் நேரத்தைச் செலவிடவும்.

(10) தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் உறுதியான தெளிவுடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -